# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-29/2022

Prosecution witness – PW4

| | | |
|---|---|---|
| Name | : திரு.செந்தூர்பாண்டி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)

09.06.2026 – 11.45 AM

முதல் விசாரணை:–

1. நான் எம்.ஆர் பட்டினத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு வழக்கு சம்மந்தமாக எதுவும் தெரியாது. எதிரிகளை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 1ம் எதிரி அளித்த ஒப்புதல் வாக்கு–மூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள சாட்சி கையொப்பங்கள் என்னுடையதுான். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சொந்த வேலையின் சம்மந்தமாக சாயல்குடி காவல் நிலையம் சென்ற போது போலீசார் என்னிடம் இரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்று கொண்டார்கள். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. **மேற்படி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகின்றன.** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

பிறழ் சாட்சி:–

சாட்சியை அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரியதன் அடிப்படையில் அனுமதி அளிக்கப்பட்டது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை: –**

கடந்த 11.07.2021ம் தேதி மதியவேலையில் நானும், முருகன் என்பவரும் கோவில் மாரியூர் கடற்கரைக்கு சென்ற போது பனங்காடு அருகே நின்று கொண்டிருந்த சாயல்குடி சார்பு ஆய்வாளர் அவர்கள் இவ்வழக்கு சம்மந்தமாக

எதிரிகளை கைது செய்த போது அவர்களில் 1ம் எதிரி எங்கள் முன்னிலையில் குற்ற சம்பவத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்ததாகவும், அவர்களது ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் திருட்டு சம்பவத்திற்கு பயன்படுத்திய TN 67 AU 5938 என்ற பதிவெண் கொண்ட பஜாஜ் பல்சர் மற்றும் பதிவெண் இல்லாத கருப்பு, சிவப்பு வெள்ளை நிறம் கலந்த TVS Appachi இருசக்கர வாகனம்ஒன்றையும், இரு செம்மறி ஆட்டுக்கிடாய்களையும், எதிரி எடுத்து ஆஜர் செய்ததை அன்றைய தினம் மதியம் 04.15மணியளவில் சார்பு ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றி தயாரித்த மகஜரில் சாட்சிகளாக கையொப்பம செய்து கொடுத்து விட்டு அதை அனுசரித்து வாக்குமூலம் கொடுத்து விட்டு பொய் சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/−தங்ககார்த்திகா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)